**இலங்கை தேசிய பட்டினியொழிப்பு பிரசார சபை - 2022**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இலங்கை தேசிய பட்டினியொழிப்பு பிரசார சபையின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்கள், பொழிப்பாக்கப்பட்ட முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளுடன் கூடிய 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தினதும், 1973 இன் 15 ஆம் இலக்க இலங்கை தேசிய பட்டினியொழிப்பு பிரசார அதிகாரச்சட்டத்தின் மற்றும் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளினதும் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தைத் தவிர்த்து நிதிக்கூற்றுக்கள் சபையின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இக.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, சபையின் தொடர்ந்தியங்கும் இயலுமையை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாக இருப்பதுடன் முகாமைத்துவமானது மன்றத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் மற்றும் மன்றம்

தொடர்ந்தியங்குவதற்கு உரிய விடயங்களை வெளிப்படுத்துவதும் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாகும்.

சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

### 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி சபை உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.
- நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் காரணமாக சபையின் தொடர்ந்து இயங்குவது தொடர்பாக போதியளவில் நிச்சயமற்ற நிலைமையொன்று இருக்கின்றதா என்பது தொடர்பாக பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக்

கொண்டு கணக்கீட்டிற்காக சபையின் தொடர்ந்தியங்குவது தொடர்பாக அடிப்படையின் பயன்பாட்டின் பொருத்தப்பாட்டினை தீர்மானிக்கின்றது. பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், நிதிக்கூற்றுக்களில் அது தொடர்பாக வெளிப்படுத்துவதற்கு எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டியதுடன் அவ்வெளிப்படுத்தல்கள் பொருண்மையாக இல்லாதிருந்தால் எனது அபிப்பிராயத்தை வெளிப்படுத்த வேண்டும். எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் சபையின் தொடர்ந்தியங்கும் நிலைமையை முடிவுறுத்த நேரலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது சபையின் நிர்வாக சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க மன்றம் செயற்படுகின்றதா எனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்

- வளங்கள் சிக்கனமாக, செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

### 1.5 நிதிக்கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்
#### 1.5.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | சபையின் சொத்துக்கள் விற்பனையிலிருந்து பெறப்பட்ட ரூபா 286,775 இற்கு பதிலாக காசுப்பாய்ச்சல் கூற்றில் முதலீட்டு நடவடிக்கைகளின் கீழ் அந்த சொத்துக்களின் கிரயம் ரூபா 737,477 காட்டப்பட்டமையால் முதலீட்டு நடவடிக்கைகளின் கீழ் உருவாக்கப்பட்ட காசுப்பாய்ச்சல் ரூபா 450,702 ஆல் அதிகமாக காட்டப்பட்டிருந்தது. | காசுப்பாய்ச்சல் கூற்றில் முதலீட்டு நடவடிக்கைகளின் கீழ் சொத்துக்கள் விற்பனையிலிருந்து பெறப்பட்ட வருமானமாக ரூபா 286,775 ஆன தொகை காட்டப்பட வேண்டுமென்பதை ஏற்றுக்கொள்கின்றேன். | காசுப்பாய்ச்சல் கூற்றில் சொத்துக்கள் விற்பனையிலிருந்து பெறப்பட்ட தொகை பெறுவனவு மட்டுமே உள்ளடக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | சபையின் தெஹிவளை மரக்கன்றுகள் கடையில் ரூபா 81,960 ஆன மரக்கன்றுகள் அழிக்கப்பட்டதுடன் அப்பெறுமதி மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்களில் சீராக்கப்படாததால் இலாபம் மற்றும் இறுதி இருப்பின் பெறுமதி அப்பெறுமதியால் அதிகமாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. | 2022 ஆம் ஆண்டில், தாவர இறப்பு மதிப்பு ரூபா 81,960 ஆக இருந்ததுடன் 2022.12.31 இல், பௌதீக இருப்பு கணக்கிடப்பட்டபோது அத்திகதியில் காணப்பட்ட ரூபா 9,690 இறுதிக் கணக்குகளைத் தயாரிப்பதில் இருப்பு இழப்பாக எடுத்துக் கொள்ளப்பட்டது. | வருடத்திற்கான மொத்த இழப்புகளும் கணக்கிடப்பட வேண்டும். |
| (இ) | மீளாய்வாண்டில் சபையினால் கொழும்பில் பிஸ்கட் உற்பத்தி செய்யும் தனியார் நிறுவனத்துடனும், புனர்வாழ்வு ஆணையாளர் நாயகத்தின் பணியகத்துடனும் சோளத்தை பயிரிட்டு வழங்குவதற்கான செயற்திட்ட ஒப்பந்தம் செய்து கொள்ளப்பட்டு , அந்த ஒப்பந்தத்தின்படி தனியார் நிறுவனம் ரூபா 18,000,000 நிதியுதவியாக மற்றும் பணியகம் தொழிலாளர்களை வழங்குவதன் அடிப்படையில் இந்த உற்பத்தி பணிகள் ஆரம்பிக்கப்பட்டது. ரூபா 15,002,995 அதற்கான செலவாக இருந்தபோதிலும், குறிப்பிட்ட பணிகள் முடிக்கப்படடாதபோது அந்த செய்யப்பட்ட செலவுகள் மற்றும் பெறுவனவுகள் வேறாக செயற்திட்ட கணக்கொன்றில் காட்டப்படுவதற்குப் பதிலாக நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டதன் காரணமாக அந்த ஆண்டுக்கான செலவுகள் மற்றும் வருமானம் அந்த பெறுமதிகளை விட அதிகமாக காட்டப்பட்டதை அவதானிக்க முடிந்தது. | ப்ளைன்ட் ஃபுட்ஸ் தனியார் நிறுவனம் மற்றும் புனர்வாழ்வு ஆணையாளர் பணியகம் சபையுடன் உடன்படிக்கை செய்து ஏற்படும் வருமானம் மற்றும் செலவுகள் சபையின் வருமானம் மற்றும் செலவுகளாக எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளன என்பதை நான் ஒப்புக்கொள்கிறேன். அவ்வாறு செய்யத் தவறினால் மறைவான வருமானம் மற்றும் செலவு எனக் காட்டப்படும். அது அடுத்த வருடம் தனி கணக்கில் காட்டப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.. | செயற்திட்டத்தின் வருமானம் மற்றும் செலவுகள் தனியான கணக்கில் காட்டப்பட வேண்டும். |
| (ஈ) | சபையினால் நீண்ட காலமாக பாவனையில் இருந்த விவசாய அமைச்சுக்கு சொந்தமான 02 மோட்டார் சைக்கிள்கள்,மோட்டார் வாகனமொன்று மற்றும் சிறு ஏற்றுமதி பயிர் ஊக்குவிப்பு சபைக்கு சொந்தமான மோட்டார் வாகனம் என்பவற்றின் உரிமைகள் சபைக்கு மாற்றப்பட்டு அவை மதிப்பிடப்பட்டு நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | இவற்றை கையகப்படுத்துவது தொடர்பாக விவசாய அமைச்சுக்கு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. | மோட்டார் சைக்கிள்கள மற்றம் வாகனங்களின் உரிமைகள் மாற்றப்பட்டு அவை நிதிக்கூற்றுக் களில் உள்ளடக்கப்பட வேண்டும். |

### 1.6. பெறவேண்டிய பணம்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| 2012 ஆம் ஆண்டு நாரஹேன்பிட்டி ஹெல்த்தீ பூட் உணவகத்தில் இடம்பெற்ற ரூபா 73,415 பெறுமதியான நிதி முறைகேடுகள் குறித்து விசாரணை நடாத்தப்பட்டு, நட்டங்கள் வசூலிக்கப்படவில்லை. | 2012 ஆம் ஆண்டு நாரஹேன்பிட்டி ஹெல்த்தீ பூட் உணவகத்தில் இடம்பெற்ற நிதி முறைகேடு தொடர்பான தொகையை மீளப் பெற்றுக்கொள்ளுமாறு விவசாய அமைச்சு கோரியுள்ளது. அதன்படி மேற்கொண்ட நடவடிக்கை எடுக்கப்படும். | நிதி நட்டங்கள் வசூலிக்கப்பட வேண்டும். |

### 1.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்கள் முதலியவற்றுடனான இணங்காமைகள்.

| | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுக்கான தொடர்பு | இணங்காமை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- | --- | --- |
| (அ) | 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(2) பிரிவு | வருடாந்த நிதிக்கூற்றுக்களுடன் சமர்ப்பிக்க வேண்டிய செயல்திறன் அறிக்கை சமர்ப்பிக்கப்படவில்லை. | வருடாந்த செயல்திறன் அறிக்கை எதிர்காலத்தில் நிதிக்கூற்றுக்களுடன் சமர்ப்பிக்கப்படும். | சட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணக் கோவை | | | |
| | (i)நி.பி 104 | 2018 ஆம் ஆண்டில் அனுராதபுரம் உபுல்தெனிய களஞ்சியத்தில் ரூபா 4,094,596 பெறுமதியான சோயா அவரை 37,223 கிலோகிராம் காணாமல் போனமை தொடர்பாக பரிசோதனை மேற்கொண்டு நட்டத்தை பொறுப்புவாய்ந்த தரப்பினரிடமிருந்து அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இது தொடர்பாக இரகசிய பொலிஸார் மற்றும் மோசடி மற்றும் ஊழல் புலனாய்வு ஆணைக்குழுவினால் உரிய விசாரணைகள் இன்னும் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. | பொறுப்புவாய்ந்த தரப்பினடமிருந்து நட்டம் அறவிடப்படல் வேண்டும். |

| | |
|---|---|
| (ii)நி.பி 571 | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் 30 தனியார் வழங்குநர்களிடமிருந்து பெறப்பட்ட 02 வருடங்களுக்கு மேற்பட்ட ரூபா 78,472,024 ஆன வைப்புக்கள் வருமானத்திற்கு எடுக்கப்படுவதற்கு அல்லது தீர்க்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டில் சபையின் நிதி விளைவுகள் ரூபா 16,020,225 மிகையாக இருந்ததுடன் அதற்கு எதிராக முன்னைய ஆண்டில் பற்றாக்குறையாக ரூபா 3,828,645 ஆனமையால் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டின் நிதி விளைவுகளில் ரூபா 19,848,870 முன்னேற்றத்தை காட்டியது. முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டில் வட்டி வருமானம் ரூபா 15,267,035 இனால் அதிகரித்தமையே மேற்கூறப்பட்ட நிதி விளைவின் முன்னேற்றம் தொடர்பில் நேரடியாகத் தாக்கமளித்திருந்தது.

### 2.2 பிரதான வருமானம் மற்றும் செலவின விடயங்களின் முக்கிய பகுப்பாய்வு

முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டில் திறைசேரி / அமைச்சு மானியம், ஏனைய செயற்பாட்டு வருமானம், வட்டி வருமானம், ஏனைய வருமானம் என்பன முறையே 25,168,137 மற்றும் 4371 சதவீதத்தினால் அதிகரித்திருந்ததுடன் ஊழியர் ஊதிய செலவினம், வழங்கல் மற்றும் தேவை செலவினம் மற்றும் போக்குவரத்து, தொடர்பாடல், பயன்பாட்டு மற்றும் ஏனைய செலவினங்கள் மற்றும் நிலையான சொத்துக்களின் பழுதுபார்த்தல் நடவடிக்கைகளுக்கான செலவினங்கள் என்பன முறையே 12, 124, 163 மற்றும் 24 சதவீதத்தினால் அதிகரித்திருந்தன.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2017 மற்றும் 2018 ஆம் ஆண்டுகளின் போது 1973 இன் 15 ஆம் இலக்க இலங்கை தேசிய பட்டினி ஒழிப்பு பிரசார சபை சட்டத்தில் காண்பிக்கப்பட்டுள்ள நோக்கங்கள் அல்லாத குளங்களில் மண் அகற்றி அதிவேக வீதிகளுக்கு விற்பனை செய்யும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. மண் அகற்றுவதற்காக ரூபா 3,370,595 செலவினமொன்று செய்யப்பட்டிருந்ததுடன் அதிவேக வீதிகளுக்கு மண் விற்பனையால் ரூபா 81,134,631 வருமானம் பெறப்பட்டிருந்தது. குள செயற்திட்ட அறிக்கையின் பிரகாரம் வழங்கப்பட்ட மண்ணிற்காக உரிய விவசாய | சபையின் நோக்கங்கள் நிறைவேற்றப்படுவதற்கான அதிகாரத்தின் கீழ் ”சபையால் செய்யப்படுகின்ற சேவைக்கான கட்டணங்கள தீர்மானிக்கப்பட்டு அறவிடப்படுவதற்கு கீழான‘‘ தெற்கு அதிவேக பாமை அபிவிருத்திக்காக வருடக் கணக்கில் கிடைக்காத குளங்கள் விவசாய அபிவிருத்தி திணைக்களத்தின் தொழில்நுட்ப ஆதரவு மற்றும் பிற அரசு நிறுவனங்களின் ஆரம்ப வெளிப்படுத்தல் நடவடிக்கைகள் வழங்கப்பட்டு, புவியியல் மற்றும் சுரங்கப் பணியகத்தின் தொடர்புடைய உரிமங்களை | சபையின் சட்டத்தின் பிரகாரம் பணிகள் மேற்கொள்ளப்பட வேண்டும். நிலையான வைப்புக்களில் உள்ள பணம் சபையின் அதிகாரங்களுக்கு பயன்படுத்தப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | அமைப்பு சபைகளில் இருந்து பணத்தை பெற்று அந்த பணத்தை அரசாங்கத்தின் நிதியேற்பாட்டுடன் ஈடுபடுத்தி சிறிய குளங்களை உரிய நியமத்தில் கமநல அபிவிருத்தி திணைக்களத்தின் பொறியியலாளர் ஆலோசனையின் கீழ் அபிவிருத்தி செய்ய வேண்டியிருந்ததாக காண்பிக்கப்பட்டிருந்த போதிலும் அவ்வாறின்றி ரூபா 77,764,036 தொகை நிலையான வைப்புக் கணக்கில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. | வழங்குவதற்காக எங்கள் நிறுவனத்தின் சேவைகளுக்கு கட்டணம் வசூலிப்பதன் மூலம் வைப்புத் தொகை கட்டப்பட்டது. அவ்வப்போது நியமிக்கப்பட்ட அமைச்சர்கள் வழங்கிய அறிவுறுத்தல்களின் அடிப்படையில், விவசாய அமைச்சு இந்த பணத்தை குளம் புனரமைப்பு அல்லது விவசாய அமைப்புக்கள் தொடர்பான ஏனைய அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கு பயன்படுத்துமாறு பணிப்புரை வழங்கியிருந்ததன் அடிப்படையில் இந்த குளங்களை அபிவிருத்தி செய்வதற்கு அரசாங்கம் மற்றும் மாகாண சபைகளில் இருந்து பணம் ஒதுக்கப்படுவதால் இந்த வைப்புத் தொகையை செலவிட வேண்டாம் என விவசாய அமைச்சில் நடைபெற்ற கலந்துரையாடலில் தீர்மானிக்கப்பட்டது. தற்போது, அந்த வைப்புத்தொகையால், திறைசேரி ஒதுக்கீடு குறைக்கப்பட்டு, நிலுவைத் தொகையை சபையே ஏற்க வேண்டியுள்ளது. | |
| (ஆ) | மீளாய்வாண்டில், தனமல்வில பண்ணையில் உள்ள சாகினி ஏரியின் புனரமைப்பின் ஒரு பகுதி விவசாய அபிவிருத்தி திணைக்களத்தினால் மேற்கொள்ளப்பட்டதுடன் எஞ்சிய பணிகளுக்கு ரூபா 1,597,201 பட்டினியொழிப்பு பிரசார சபையினால் செலுத்துவதற்கும் உடன்பட்டு அதற்காக விவசாய அபிவிருத்தி திணைக்களத்திற்கு முற்பணமாக ரூபா 500,000 வழங்கப்பட்ட போதிலும், ஏரியின் எஞ்சிய பணிகள் முறையாக பூர்த்தி செய்யப்பட்டு பண்ணையில் உள்ள பயிர்களுக்கு தண்ணீர் பெறப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | தனமல்வில குளத்தை நிர்மாணிப்பதில் காணப்படும் குறைபாடுகள் தொடர்பில் விவசாய அபிவிருத்தி ஆணையாளர் நாயகத்துடன் எதிர்வரும் காலங்களில் சந்திப்பொன்று நடத்தப்பட உள்ளது. | குளத்தை பயன்பாட்டிற்கு கொண்டு வரும் வகையில், அதற்கான பணிகளை முடித்து, பயிர்ச்செய்கை நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் |
| (இ) | மீளாய்வாண்டில் மேற்கொள்ளப்பட்ட நாற்று மேடைகள், பாரம்பரிய அரிசி விற்பனை செயற்திட்டம் மற்றும் விவசாய பண்ணை போன்ற 13 செயற்திட்டங்களில் 09 செயற்திட்டங்கள் தேறிய நட்டத்தை பெற்றிருந்ததுடன் அந்த 09 செயற்திட்டங்களின் தேறிய நட்டம் ரூபா 12,511,507 ஆகும். | அவதானிப்புடன் இணங்குகின்றேன். எதிர்வரும் ஆண்டில், அரச தனியார் கூட்டுறவு செயற்பாட்டின் கீழ் புதிய திட்டங்களை செயல்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது. | செயற்படுத்தப் படுகின்ற செயற்திட்டங்கள் இலாபம் பெறக்கூடிய வகையில் அமுல்படுத்தப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஈ) | நிதிக்கூற்றுக்களின் குறிப்புகளில் சேர்க்கப்பட்டுள்ள அரச நிறுவனங்கள், தனியார் நிறுவனங்கள் மற்றும் தனிநபர்களிடம் அறவிடவேண்டிய ரூபா 691,211 ஆன பெற வேண்டிய நிலுவைத் தொகைகள் 08 வருடங்களுக்கும் மேலாக நிலுவையில் இருந்தும் அவற்றைத் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | அந்த கடன்பட்டோர் நிலுவைகள் 2011 மற்றும் 2012 இன் நிலுவைகளாகும். இது தொடர்பான நி.பி.104 ஆய்வு அறிக்கை கிடைத்துள்ளதுடன், அது பணிப்பாளர் சபைக்கு சமர்ப்பிக்கப்பட்டு அதன்படி நடவடிக்கை எடுக்கப்படும். | கடன்பட்டோர் நிலுவைகளை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (உ) | மீளாய்வாண்டில் திசெம்பர் 31 இல் ரூபா 62,382 ஆன அட்டுறு செலவுகள் 03 ஆண்டுகளுக்கும் மேலாக காணப்படுவதுடன் அவை தீர்க்கப்படவில்லை. | அவதானிப்புடன் இணங்குகின்றேன். விரைவில் பணம் தீர்க்கப்படும். இந்தத் தொகைகளில் ஹெல்த்பூட் திட்டத்துடன் தொடர்பான அறவிடப்பட வேண்டிய கடன்கள் வசூலிக்கப்படாது நிலுவையில் உள்ள வைப்புத் தொகைகளும் அடங்கும். | அட்டுறு செலவுகளை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஊ) | தனமல்வில மற்றும் புத்தல பண்ணைகளின் உரிமையானது பிரதேச செயலகத்திடம் இருந்து 30 வருட நீண்டகால குத்தகை அடிப்படையில் பெறப்பட்டதாக நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்த போதிலும் அதற்கான உரிமங்கள் சபையிடம் இருக்கவில்லை. | எதிர்காலத்தில் அதை திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | காணிகளின் உரிமை கையகப்படத்தப்பட வேண்டும். |

**3.2 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| **(அ)** | **தனமல்வில பண்ணை** | | |
| (i) | 2020 ஆம் ஆண்டில் ரூபா 600,000 செலவிடப்பட்டு கரிம உரம் பதப்படுத்தும் கட்டிடம் கட்டப்பட்டு அது பயன்படுத்தப்படாமல் விளைவற்றுக் காணப்பட்டபோது மீளாய்வவாண்டில் செயல் நடவடிக்கைத் திட்டத்தில் 329 மெட்ரிக் டன் கரிம உரங்களை உற்பத்தி செய்வதற்கும் மற்றுமொரு கரிம உர அலகு ஸ்தாபிப்பதற்கும் ரூபா 3,950,000 ஒதுக்கப்பட்ட போதிலும் இந்த நடவடிக்கைகள் எதுவும் மேற்கொள்ளப்படவில்லை. | பயிர்ச்செய்கை திட்டங்கள் தீட்டப்பட்டாலும், ஏரியை சீரமைக்காததால், திட்டங்களை நிறைவேற்ற முடியவில்லை. கரிம உர உற்பத்தி திட்டத்திற்கான மூலப்பொருட்களை கண்டுபிடிப்பதில் சிரமம், மூலப்பொருட்களின் அதிக தேவை காரணமாக மூலப்பொருட்களின் பற்றாக்குறை மற்றும் எரிபொருள் விலை உயர்வால் போக்குவரத்துச் செலவு அதிகம் என்பதால் உற்பத்தி செய்வதற்கு முடியவில்லை. விவசாய இடுபொருட்களை விற்பனை நிலையங்கள் மூலம் விற்பனை செய்ய திட்டமிடப்பட்டிருந்தாலும், போக்குவரத்து செலவு அதிகமாக உள்ளதால் இச்செயற்திட்டம் திட்டமிட்டபடி மேற்கொள்ளப்படவில்லை. | செயற்திட்டத்தைத் திட்டமிடும்போது, தற்போதுள்ள சந்தை, உற்பத்திச் செலவு, மூலப்பொருட்களின் இருப்பு போன்றவற்றைக் கருத்தில் கொள்ள வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ii) | கடந்த மற்றும் மீளாய்வாண்டில செயல் நடவடிக்கைத் திட்டத்தில் தேசிய விதை உற்பத்தியை ஆதரிப்பதற்கு அந்த பண்ணையின் பயன்பாட்டிற்காக முறையே ரூபா 500,000 மற்றும் ரூபா. 1,000,000 ஒதுக்கப்பட்டிருந்தும் அப்பணிகள் மேற்கொள்ளப்படவில்லை. | விவசாய அபிவிருத்தி திணைக்களத்தினால் திட்டமிட்டபடி ஏரியின் புனரமைப்புப் பணிகள் நிறைவடையாததால், முறையான நீர் விநியோக முறையின்றி முன்மொழியப்பட்ட பயிர்ச் செய்கை திட்டங்களை மேற்கொள்ள முடியவில்லை. | செயல் நடவடிக்கைத திட்டத்தின் பணிகளை நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| **(ஆ)** | **புத்தல பண்ணை** | | |
| (i) | தனியார் முதலீட்டாளருக்கு புத்தல பண்ணையில 2021 ஏப்ரல் 05 ஆம் திகதியிலிருந்து சபையின் பெயரைப் பயன்படுத்தி கரிம உரங்களைத் தயாரித்து விநியோகிப்பதற்கு இடம் வழங்கப்பட்டிருந்தது. அதன் தயாரிப்பு மாதிரிகள் தொடர்பாக விவசாய அமைச்சிற்கு சொந்தமான ஆராய்ச்சி நிறுவனமான நிலையான விவசாய ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி மையத்தினால் சமர்ப்பிக்கப்பட்ட பகுப்பாய்வு அறிக்கையின்படி, அவை மிகவும் தரம் குறைந்தவையாக காணப்பட்டதாக் குறிப்பிடப்பட்டுள்ள நிலையில் தரம் தொடர்பாக கருத்திற்கொள்ளாது மீளாய்வாண்டில் 166,500 கிலோ கிராம் கரிம உரங்கள் மற்றும் பானை கலவைகள் சபையின் பெயரில் விற்கப்பட்டிருந்தன. | இந்த தொழில் முயற்சி அதன் தொடக்கத்தில் இருந்து இயற்கை உரங்களை உற்பத்தி செய்து வருகின்றது. விசாரணையில் குறிப்பிடப்பட்ட நிலைமை 90% க்கும் அதிகமாக சந்தைப்படுத்தப்பட்ட கரிம உர தயாரிப்புகளில காணப்பட்டது. கரிம உரங்களுக்குப் பயன்படுத்தப்படும் கரிமப் பொருட்களில் இருந்து புதிதாகத் தயாரிக்கப்பட்ட நைட்ரஜனின் அளவைப் பெறுவதில் உள்ள சிரமமும், கரிம உரங்களை உற்பத்தி செய்யும் தொழில்முனைவோருக்கு உயர் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்துவதற்கான வசதிகளை வழங்காத காரணத்தினால் கரிம உரங்கள் உற்பத்தி தற்காலிகமாக நிறுத்தப்பட்டது. அமைச்சினால் கரிம உரங்களுக்கான விசேட வசதிகளை வழங்கிய கொழும்பு கொமர்ஷல் உர நிறுவனத்திடம் இருந்து கரிம உரங்கள் கொள்வனவு செய்யப்பட்டன. எனவே புத்தல தொழில் முயற்சியிடமிருந்து பானை கலவை மட்டுமே கொள்வனவு செய்யப்பட்டது. | உயர்தர உரங்களை நுகர்வோருக்கு முறையான தரத்திற்கு ஏற்ப வழங்குவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட வேண்டும். |
| (ii) | சபையால் விதை மஞ்சளின் தேவையை பூர்த்தி செய்வதற்கு பங்களிக்கும் நோககத்தில் புத்தல பண்ணையில் 2.5 ஏக்கர் இல் 2,500 கிலோ விதை மஞ்சளை பயிரிட்டு அதற்காக மீளாய்வாண்டில் ரூபா 1,345,544 மற்றும் கடந்த ஆண்டில் ரூபா 2,104,383 உம் ஆக மொத்தம் ரூபா 3,449,927 செலவிடப்பட்டது. உற்பத்தியில எதிர்பார்க்கப்பட்ட மஞ்சள் அறுவடை 15,167 கிலோ கிராமாக இருந்தபோதிலும், உண்மையான அறுவடை 1,710 கிலோ கிராமாக இருந்தது, இது எதிர்பார்த்த அறுவடையை விட 89 சதவீதத்தால் | மஞ்சள் பயிர்ச்செய்கைக்கு தண்ணீர் வசதிக்காக ஆழ்குழாய் கிணறு அமைக்கப்பட்டாலும், முன்னறிவித்தபடி தண்ணீர் கிடைக்காமை இப் பயிர்ச்செய்கை தோல்வியடைந்தமைக்கு காரணமாக இருந்தது. விவசாய அமைச்சின் புதிய கண்டுபிடிப்பாளர்களை வெற்றிகரமான தொழில்முனைவோராக மாற்றும் திட்டத்தில் மஞ்சள் பதப்படுத்தும் இயந்திரங்களின் உற்பத்தித்திறன் மற்றும் தயாரிப்புக்களின் தர சோதனைக்காக மஞ்சள் பயிர்ச்செய்கையின் அறுவடையான | கிடைக்கும் தண்ணீரின் அளவை தவறாகக் கணிப்பிட்ட ஒப்பந்ததாரரிடம் இருந்து கிணறு அமைப்பதற்கு செலவிட்ட கிரயத்தை வசூலித்து அல்லது வேறு கிணறை அமைத்து திட்டத்தை வெற்றி பெறச் செய்ய வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | குறைவாக இருந்தது. 2023 மார்ச் 24 வரை மஞ்சள் இருப்பு விற்பனை செய்வதற்கான நடவடிக்கை எடுக்கப்படவில்லை. அதற்காகச் செலவழிக்கப்பட்ட மொத்தத் தொகையும் பொருளாதாரமற்ற செலவொன்றாக காணப்பட்டது. | 1710 கிலோகிராம் மஞ்சள் பயன்படுத்தப்பட்டது. இந்த ஆராய்ச்சியின் போது, எதிர்காலத்தில் உலர் மஞ்சள் பொடியை சந்தைக்கு விநியோகிப்பதற்கு திட்டமிட்டுளளது. | |
| (இ) | மீளாய்வாண்டில் ரூபா 16,020,225 நிகர இலாபத்திற்கு நேரடியாக ரூபா 26,392,996 நிலையான வைப்புத்தொகை வட்டி வருமானம் பங்களித்திருந்ததுடன் சபையால் மேற்கொள்ளப்பட்ட ஏனைய திட்டங்கள் திருப்திகரமாக செயல்படவில்லை என்பது அவதானிக்கப்பட்டது. | அவதானிப்புடன் இணங்குகின்றேன். எதிர்வரும் வருடத்தில் இலாபத்தை அதிகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | திட்டங்கள் திருப்திகரமான செயல்திறனில் பராமரிக்கப்பட வேண்டும். |
| (ஈ) | மீளாய்வாண்டில், கலங்குட்டிய அரிசி மாவு பதப்படுத்தும் பிரிவில் உற்பத்திகள் எதுவும் செய்யப்படவில்லை என்பதுடன் 03 இயந்திரங்கள் வியைவற்றுக் காணப்பட்டன. | கனோருவா உணவு ஆராய்ச்சிப் பிரிவில் உள்ள இயந்திரங்கள் கலங்குட்டிய அரிசி மாவு இயந்திரத்தை விட உயர் தரம் மற்றும் விவரக்குறிப்புகளைக் கொண்டுள்ளன.மேலும் அவற்றின் செயல்திறன் அதிக உற்பத்தி செலவைக் குறைக்கும் நோக்கத்துடன் இந்த ஆராய்ச்சிப் பிரிவில் உள்ள இயந்திரங்களையும் பயன்படுத்துகிறது. | காலாங்குட்டிய அரிசி மாவு பதப்படுத்தும் ஆலையில் அல்லது வேறு சில நோக்கங்களுக்காக இயந்திரங்களைப் பயன்படுத்துவதற் கான எதிர்காலத் திட்டங்கள் உருவாக்கப்பட வேண்டும். |

**4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்**

**4.1 ஆண்டறிக்கை பாராளுமன்றத்தில் சமர்ப்பித்தல்**

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| 2018, 2019, 2020 மற்றும் 2021 ஆம் ஆண்டுகளின் வருடாந்த செயலாற்றல் அறிக்கை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | தற்போது அனைத்து ஆண்டு அறிக்கைகளும் தயார் செய்யப்பட்டுள்ளன. 2018, 2019, 2020 ஆண்டு அறிக்கைகள் அமைச்சரவைக்கு அனுப்புவதற்காக விவசாய அமைச்சிடம் கையளிக்கப்பட்டுள்ளன. 2021 ஆம் ஆண்டுக்கான ஆண்டறிக்கைகள் விவசாய அமைச்சிற்கு அவதானிப்புக்களுக்காக அனுப்பப்பட்டுள்ளது. இறுதி கணக்காய்வு அறிக்கை கிடைத்த பிறகு 2022 ஆண்டு அறிக்கையை அனுப்புவதற்கான நடவடிக்கை எடுக்கப்படும். | தாமதமின்றி ஆண்டறிக்கைகள் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படல் வேண்டும். |